**மோட்டார் வாகனங்கள் விபத்து இழப்பீட்டுக் கோருரிமைத் தீர்ப்பாயம், சென்னை**

**(I சிறப்பு நீதிமன்றம், சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை)**

**முன்னிலை :** திரு. எஸ். வடிவேல், பி.எஸ்.சி, பி.எல்.,

I சிறப்பு நீதிபதி, சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 9-ஆம் நாள் வியாழன் கிழமை

**மோ.வா.வி.இ.கோ.தீ. மனு எண். 5809/2024**

**(CNR No. TNCH09-010485-2024)**

1. P.Umapathi
   S/o. Late P.Kannappa Reddy
   No.1-105, Ramapuram,
   Gundrajukuppam Post,
   Nagari VTC, Ekambarakuppam,
   Chittoor District A.P.517592.

2. K.Subhadra
   W/o. K.Govinda Reddy
   No.8-78, Ramapuram,
   Gundrajukuppam Post,
   Nagari VTC, Ekambarakuppam,
   Chittoor District A.P.517592.

3. P.Venu
   S/o. Late P.Kannapa Reddy
   No.0-00, Ramapuram,
   Gundrajukuppam Post,
   Nagari VTC, Ekambarakuppam,
   Chittoor District A.P.517592. .....Petitioners

//எதிராக//

The State Express Transport Co. Ltd.,
Rep. by its Managing Director,
Thiruvallur House,
Pallavan Salai, Mount Road,
Chennai - 600 002. ......Respondent



S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.07.09 17:19:42 +0530

இம்மனு 24.06.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு/திருமதி. L.Mohan Rao, S.Bharath & L.Monish Rao அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு/திருமதி. E.Subramani அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இத்தீர்ப்பாயம் வழங்கும்,

**உத்தரவு**

1988 வருட மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 166 மற்றும் மோட்டார் வாகன விதி 3ன் கீழ் இம்மனுவானது மோட்டார் வாகன விபத்தில் இறந்து போன Munemma என்பவரின் இறப்பிற்கு ரூ.15,00,000/- இழப்பீடு கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டது.

**1. மனுவின் சுருக்கம்**

இந்த மனுவில் குறிப்பிட்ட விபத்தில் காலமானவர் கடந்த 26.04.2024-ம் தேதி சுமார் 02.15 மணியளவில் புத்தூர் - நகரி நெடுஞ்சாலையில் உள்ள கண்ணம் மிட்டா, தர்மாபுரம் கிராமத்திற்கு அருகில் உள்ள காளியம்மன் கோவில் பகுதியில் பாதசாரியாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, அந்த நேரத்தில் TN 01 AN 1938 என்ற பதிவு எண் கொண்ட SETC பேருந்தை அதன் ஓட்டுநர் நகரி நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று காலமானவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், இந்த விபத்தின் காலமானவருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், இந்த விபத்து TN 01 AN 1938 என்ற பதிவு எண் கொண்ட SETC பேருந்து ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவின் காரணமாக ஏற்பட்டதாகவும், எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் என்றும், விபத்தில் Munemma காலமாகி விட்டதினால் எதிர்மனுதாரர் இழப்பீடாக ரூ.15,00,000/-ம் மற்றும் வழக்கு செலவு தொகையும் வழங்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.07.09 17:19:45 +0530

**2. எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்படும் எதிருரையின் சுருக்கம் :-**

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறானது, அற்பமானவை என்றும், இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும் என்றும், காலமானவரின் வயது, தொழில், முகவரி மற்றும் விபத்து நடந்த விதம் போன்றவற்றை இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை என்றும், மனுதாரர்கள் சொல்வது போல் விபத்து நடைபெறவில்லை என்றும், இந்த எதிர்மனுதாரரின் கவனகுறைவால் இந்த விபத்து நடைபெறவில்லை என்றும், காலமானவரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் அதனால் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்று தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

**3.இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனைகள் யாதெனில்,**

1. இந்த விபத்து 26.04.2024-ம் தேதி சுமார் 20.15 மணியளவில் TN 01 AN 1938 என்ற பதிவு எண் கொண்ட SETC பேருந்து ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவின் காரணத்தால் ஏற்பட்டதா?
2. யாரால் இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கது, எவ்வளவு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத் தக்கது. ?
3. அவ்வாறெனில் மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை கிடைக்கக்கூடியதா?
4, வேறு ஏதேனும் பரிகாரம் உண்டா?

4. இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் 3ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. விபத்தை கண்ணுற்ற சாட்சி ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக ம.சா.ஆ15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரையும்

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.07.09 17:19:47 +0530

விசாரணை செய்யப்படவில்லை மற்றும் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இத்துடன் இருதரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

**5. இருதரப்பு வாதங்களின் சுருக்கம்**

5.1. மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது எழுத்துமூலமான வாதுரையில், இந்த மனுவில் குறிப்பிட்ட விபத்தில் காலமானவர் கடந்த 26.04.2024-ம் தேதி சுமார் 02.15 மணியளவில் புத்தூர் - நகரி நெடுஞ்சாலையில் உள்ள கண்ணம் மிட்டா, தர்மாபுரம் கிராம்திற்கு அருகில் உள்ள காளியம்மன் கோவில் பகுதியில் பாதசாரியாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, அந்த நேரத்தில் TN 01 AN 1938 என்ற பதிவு எண் கொண்ட SETC பேருந்தை அதன் ஓட்டுநர் நகரி நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று காலமானவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், இந்த விபத்தின் காலமானவருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், இந்த விபத்து TN 01 AN 1938 என்ற பதிவு எண் கொண்ட SETC பேருந்து ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவின் காரணமாக ஏற்பட்டதாகவும், விபத்தில் Munemma என்பவர் காலமானதற்கு உரிய இழப்பீடு வழங்க எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட வேண்டுமென குறிப்பிட்டு வாதத்தை முன்வைத்துள்ளார்.

5.2. எதிர்மனுதாரர் தரப்பில் வாதம் செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் எழுத்துமூல வாதமோ அல்லது வாய்மொழி வாதமோ முன்னிலைப்படுத்தவில்லை.

**6. பிரச்சனை – 1க்கான தீர்வு:-**

6.1. வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. 3ம் மனுதாரர் ம.சா.1 ஆகவும், கண்ணுற்ற சாட்சி ம.சா.2 ஆகவும்



S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.07.09 17:19:50 +0530

விசாரிக்கப்பட்டுள்ளார்கள். ம.சா.1 மற்றும் ம.சா.2 ஆகியோர்கள் மனு சங்கதிகளை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. மேலும் நடந்த விபத்தை உறுதிபடுத்தும் வகையில் விபத்து நடைபெற்றது குறித்து பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்து குறித்து புகார் அளிக்கப்பட்டு அதற்காக சித்தூர் மாவட்டம், Nagari UPS காவல்நிலையத்தில் எதிர்மனுதாரரின் TN 01 AN 1938 என்ற பதிவு எண் கொண்ட பேருந்து ஓட்டுநருக்கு எதிராக குற்ற எண்.82/2024-ல் இ.த.ச பிரிவுகள் 304 (A), 279-ன் கீழ் 27.04.2024-ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இருப்பதாக அறிய முடிகிறது.

6.2. மேற்கண்ட ம.சா.1 மற்றும் ம.சா.2ன் வாய்மொழி சாட்சியம், ம.சா.ஆ1 முதல் தகவல் அறிக்கையை காணும்போது மனுதாரர் சொல்வது போல் ஒரு விபத்து நடந்து அதில் Munemma என்பவர் காலமாகி உள்ளார் என்பது தெரிய வருகிறது. ம.சா.1 மற்றும் 2ஐ, எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தபோதிலும் மனுதாரர் தரப்பு வழக்கினை பொய்ப்பிக்கும் அளவிற்கு எதிர்சாட்சியம் எதுவும் பெறமுடியவில்லை. எனவே, மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சங்கதிகளான எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை ஓட்டிய அதன் ஓட்டுநர் சம்பவ நாள், நேரம், இடத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தி Munemma என்பவரின் இறப்பிற்கு காரணமாகி உள்ளார் என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. அதன்படியே வினா எண் 1-ற்கு விடை காண்கிறது.

7. **<u>பிரச்சனை எண் 2க்கான தீர்வு</u>**

விபத்தானது 26.04.2024 அன்று எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 01 AN 1938 என்ற பதிவு எண் கொண்ட பேருந்து ஓட்டுநரால் ஏற்பட்டது என்பது மேலே விவரித்த



S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.07.09 17:19:53 +0530

வகையில் திட்டவட்டமாக தீர்மானித்துள்ள நிலையில் எதிர்மனுதாரர் நிறுவனம் தான் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்று இத்தீர்ப்பாயம் முடிவு காண்கிறது.

**8. பிரச்சனை எண் 3 க்கான தீர்வு:-**

(அ) பிரச்சனை 1ற்கு TN 01 AN 1938 என்ற பதிவு எண் கொண்ட பேருந்து ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், பிரச்சனை எண் 2ற்கு TN 01 AN 1938 என்ற வாகனத்தின் உரிமையாளரான எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகையினை மனுதாரர்களுக்கு செலுத்தவேண்டுமென தீர்வு காணப்பட்டுள்ளதாலும், விபத்தின் காரணமாக Munemma என்பவர் காலமாகிவிட்டார் என்பதை ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை நகல், ம.சா.ஆ.2 பிரேத பரிசோதனை அறிக்கை நகல் மற்றும் ம.சா.ஆ3 இறப்பு சான்றிதழ் நகல் மூலம் அறிய முடிகிறது.

ம.சா.ஆ.4 குடும்ப உறுப்பினர் சான்றிதழின் படி மனுதாரர்கள் காலமானவரின் வாரிசுதாரர்கள்/சார்ந்தவர்கள் என்று அறிய முடிகிறது. மனுதாரர்கள் அனைவருக்கும் வயது முறையே 50, 45, 40 ஆகும். மனுதாரர்கள் அனைவரும் திருமணமாணவர்கள். மனுதாரர்கள் அனைவரும் காலமானவரின் முதல் நிலை வாரிசுதாரர்கள் ஆவார்கள். ஆனால் மனுதாரர்கள் அனைவரும் விபத்தில் காலமானவரை சார்ந்து வாழ்ந்தார்கள் என்றோ அல்லது காலமானவரின் சார்ந்து முழுவதும் வாழவில்லை என்றோ கருதமுடியாது. மனுதாரர்கள் அனைவரும் அவரவர் வருமானத்தின் பேரில் வாழக்கூடியவர்கள். இருப்பினும் மனுதாரர்கள் தங்களுடைய தாயாரின் வருமானத்தை பகுதியாக சார்ந்து வாழ்ந்திருக்க வாய்ப்பு உள்ளது. எனவே மேற்கண்ட மனுதாரர்கள் மனு இழப்பீட்டு தொகையை பெற தகுதி உடையவர்கள் என இத்தீர்ப்பாயம் முடிவு காண்கிறது. இனி பல்வேறு தலைப்புகளின் கீழ் மனுதாரர்கள் பெறத்தக்க இழப்பீடு தொகைகள் குறித்து ஆராய வேண்டியது அவசியம் என்று இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.



S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.07.09 17:19:55 +0530

(ஆ) Smt. Sarla Verma & Ors. vs. Delhi Transport Corporation & Anr. (2009) 4 MLJ (SC) 997 என்ற தீர்ப்பினில் பத்தி 9ன்படி காலமான நபரின் வயது மற்றும் வருமானத்தை நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியம் என இந்தத் தீர்ப்பாயம் கருதுகிறது.

(இ) **காலமான நபரின் வயது**

விபத்து சமயத்தில் காலமான நபரின் வயது குறித்து ஆராய்கையில் காலமானவரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் காலமானவரின் பிறந்த தேதி 01.01.1961 என் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ம.சா.ஆ5 ஆதார் அட்டை நகலின் படி விபத்து சமயத்தில் காலமானவரின் வயது 63 என்று அறிய முடிகிறது.

**பெருக்கீடுகள்**

(ஈ) **மாதவருமானம்**

மனுதாரர்கள் தரப்பில் காலமானவர் விபத்து சமயத்தில் கூலி வேலை செய்து நான் ஒன்றுக்கு ரூ.600/- சம்பாதித்தாக மசா.1 மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் காலமானவரின் தொழில் மற்றும் வருமானத்தை உரிய சாட்சியங்களின் மூலம் நிரூப்பிக்கவில்லை. காலமானவருக்கு வயது 63 என்பதாலும் மனுதாரர்கள் அனைவரும் திருமணமாணவர்கள் என்பதாலும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம், Shishupal @ Shish Ram Vs Surjeet and Another Judgment dated 11.06.2026 முன்தீர்ப்பு இவ்வழக்கிற்கு பொருந்தாது. இருந்தபோதிலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற இரு அமர்வு Andal vs Avinanv Kannan order Dated 09.10.2018 முன்தீர்ப்பின் அடிப்படையில் 2024-ல் காலமானவரின் குறைந்தபட்ச மாத வருமானமாக ரூ.18,300/- எடுத்துக்கொள்ளலாம் என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.07.09 17:19:58 +0530

(உ) **எதிர்கால வரும்படி (Future Prospectus)**

காலமானவரின் வயது 63 என்றும், மாத வருமானம் ரூ.18,300/-என்றும் நிர்ணயம் செய்துள்ளதால் பிரணாய் சேத்தி முன் தீர்ப்பு படி கூடுதல் எதிர்கால வருமானம் இல்லை. எனவே காலமான நபரின் வருமானம் ரூ.18,300/- என்றால் ஒரு ஆண்டிற்கு கணக்கிட்டால் ரூ.2,19,600/- (ரூ.18,300/- x 12) வருகிறது.

(ஊ) **கழிவுகள் ((Deductions)**

மனுவின் படி விபத்து சமயத்தில் மனுதாரர்கள் காலமானவரை பகுதியாக சார்ந்து வாழ்ந்ததாக அறிய முடிகிறது. ரேஷ்மா குமாரி முன்தீர்ப்பு படி காலமானவரின் ஆண்டு வருமானத்தில் 1/2 பங்கினை கழிவாக எடுத்துக்கொள்ளலாம் என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

ஆண்டு வருமானம் ரூ.2,19,600/-

1/2 கழிவு ரூ.1,09,800/-

மேற்கண்ட ஆய்விலிருந்து காலமான நபர் தனது குடும்பத்திற்கு ஆண்டிற்கு ரூ.1,09,800/- யை கொடுத்திருப்பார் என்று இத்தீர்ப்பாயம் முடிவு காண்கிறது.

(எ) **பெருக்கீடுகள்**

காலமானவரின் வயது 63 என நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதால் சரளா வர்மா முன்தீர்ப்பின் படி அவருக்கு 7 பெருக்கீட்டினை எடுத்துக்கொள்ளலாம் என இத்தீர்ப்பாயம் கருதுகிறது.

(ஏ) **சார்ந்தோர் இழப்பு (Loss of Dependency)**

ஒரு ஆண்டிற்கு குடும்பத்திற்கு கொடுக்கப்படும் தொகையை பெருக்கீட்டின்படி பெருக்கும்போது சார்ந்தோர் இழப்பு தொகை கிடைக்கும். அதன்படி காலமானவர் ஒரு



S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.07.09 17:20:00 +0530

வருடத்திற்கு குடும்பத்திற்கு கொடுக்கும் ரூ.1,09,800/-ஐ பெருக்கீடு 7 உடன் பெருக்கினால் கீழ்க்கண்ட தொகை சார்ந்தோர் இழப்பீடாக கிடைக்கும் என இந்தத் தீர்ப்பாயம் கருதுகிறது.

வயது = 63

பெருக்கீடு = 7

ஒரு வருடத்திற்கு கொடுக்கும் தொகை ரூ.1,09,800/-

**சார்ந்தோர் இழப்பு ரூ.7,68,600/- (ரூ.1,09,800/- X 7)**

(ஐ) **உறவு இழப்பு, பதவி இழப்பு, மற்றும் ஈமச்சடங்கு இழப்பு**

**Loss of Consortium, Loss of Estate and Funeral Expenses**

மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிரனாய் சேத்தி முன்தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளபடி மனுதாரர்கள் காலமானவரின் மக்கள் என்ற வகையில் காலமானவரின் வாரிசுகள்/சாார்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பு பணத்தால் ஈடு செய்ய இயலாது என்பதால் உறவு இழப்பிற்காக அவர்களுக்கு தலா ரூ.48,400/-ம் வழங்கி மொத்தமாக ரூ.1,45,200/- மும், சொத்து இழப்பிற்காக ரூ.18,150/-மும், ஈமச்சடங்கிற்காக ரூ.18,150/-மும் (மாண்புமிகு உச்சநீதிமன்ற அரசியலமைப்பு அமர்வு முன்தீர்ப்பான பிரனய் சேத்தி வழக்கின் பத்தி 54ன் படி) வழங்குவது நீதியின்பால் சரியாக இருக்கும் என்று இந்தத் தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

முடிவாக, மனுதாரர் கீழ்க்கண்ட தலைப்பில் கீழ்க்கண்ட தொகைகளை இழப்பீடாக பெறத் தகுதியுடையவர் என இந்தத் தீர்ப்பாயம் கருதுகிறது.

| | | |
|---|---|---|
| சார்ந்தோர் இழப்பு | = | **ரூ.7,68,600/-** |
| உறவு இழப்பு | = | ரூ.1,45,200/- |
| சொத்து இழப்பு | = | ரூ.18,150/- |
| ஈமச்சடங்கு செலவு | = | ரூ.18,150/- |
| | | ========== |
| **மொத்தம்** | - | **ரூ.9,50,100/-** |
| | | ---------- |



S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.07.09 17:20:02 +0530

முடிவில் இம்மனு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்குான மொத்த சரியான இழப்பீடாக **ரூ.9,50,100/-** வழங்க வேண்டும் என்பதாக இத்தீர்ப்பாயம் நிர்ணயித்து கீழ்க்கண்டவாறு உத்தரவிடுகிறது.

a) எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு விபத்து இழப்பீட்டு தொகை கொடுக்க கடமைப்பட்டவர்களாக உள்ள நிலையில், மேற்படி இழப்பீட்டு தொகையினை எதிர்மனுதாரர் கொடுக்க பொறுப்பானவர் என தீர்மானித்துள்ளதால், இழப்பீடு தொகை **ரூ.9,50,100/-** மற்றும் அதற்கான பின் வட்டி மனு தாக்கல் செய்த நாளிலிருந்து தொகை முழுவதும் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யும் காலம் வரை 7.5சதவீத ஆண்டு வட்டியுடன் மனு தள்ளுபடி ஏதேனும் செய்யப்பட்டிருப்பின் அந்த காலத்தை கழித்து கொண்டு எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. மொத்த இழப்பீட்டுத் தொகையும் காலமானவரின் மக்களான மனுதாரர்களுக்கு தலா ரூ.3,16,700/- கிடைக்கக்கூடியது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

b) எதிர்மனுதாரர், மேற்படி இழப்பீடுத் தொகையை வங்கி கணக்கு எண் Indian Bank, High Court Building Branch, A/c No.7103261207, IFSC Code No.IDIB000M157, MICR No.600019117ல் NEFT or RTGSன் கீழ் நேரடியாக இவ்வுத்தரவு பிறப்பித்த இரண்டு மாத காலத்திற்கு வைப்பீடு செய்யவும், மாண்புமிகு மதராஸ் உயர்நீதிமன்றம் CMA No.428/2016 dated 11.03.2016ல் பத்தி 11 (IX) ல் குறிப்பிட்டுள்ள உத்தரவின் படி அது குறித்த தகவலை இத்தீர்ப்பாயத்திற்கு உடனடியாக தெரிவிக்கவும், அவ்வாறு வைப்பீடு செய்த நடவடிக்கை குறித்த ஆவண நகலினை மனுதாரருக்கோ அல்லது அவரது வழக்கறிஞருக்கோ நேரடியாக வழங்கவும் உத்தரவிடப்படுகிறது.

c) மனுதாரர்களின் இழப்பீட்டு தொகை மற்றும் அதற்கான வட்டியை உடனடியாக மனுதாரர்களின் வங்கிக்கணக்கு எண்ணிற்கு நேரடியாக மாறுதல் செய்ய உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்களின் வங்கிக் கணக்கு விவரங்கள் :-

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.07.09 17:20:05 +0530

1ம் மனுதாரரின் பெயர் - P.Umapathi

| வங்கி பெயம் மற்றும் கிளை | வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code |
|---|---|
| UCO Bank, Sowcarpet, Chennai | Ac NO: 00420110078570<br>IFSC : UCBA0000042 |

2ம் மனுதாரரின் பெயர் - K.Subhadra

| வங்கி பெயம் மற்றும் கிளை | வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code |
|---|---|
| UCO Bank, Sowcarpet, Chennai | Ac NO: 00420110078556<br>IFSC : UCBA0000042 |

3ம் மனுதாரரின் பெயர் - P.Venu

| வங்கி பெயம் மற்றும் கிளை | வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code |
|---|---|
| UCO Bank, Sowcarpet, Chennai | Ac NO: 00420110078563<br>IFSC : UCBA0000042 |

d) இழப்பீட்டுத்தொகை கோரிய மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் ரூ.375/-. மனுதாரர்கள் செலுத்த வேண்டிய மொத்த நீதிமன்ற கட்டணம் ரூ.8,873.50/-. இழப்பீட்டுத்தொகை கோரிய மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் போக மீதமுள்ள ரூ.8,498.50/-ஐ நீதிமன்றக்கட்டணமாக செலுத்த உத்தரவிடப்படுகிறது.

e) வழக்கறிஞருக்குரிய கட்டணமாக ரூ.16,501/- நிர்ணயிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து=தட்டச்சருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.07.09 17:20:10 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:-</u>**

ம.சா.1 - திரு. Venu
ம.சா.2 - திரு. கோபி

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.2 | பிரேத பரிசோதனை அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.3 | இறப்பு சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.4 | குடும்ப உறுப்பினர் சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.5 | காலமானவரின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ.6 | 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ.7 | 1ம் மனுதாரரின் பான் அட்டை நகல் |
| ம.சா.ஆ.8 | 1ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல் |
| ம.சா.ஆ.9 | 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ.10 | 2ம் மனுதாரரின் பான் அட்டை நகல் |
| ம.சா.ஆ.11 | 2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல் |
| ம.சா.ஆ.12 | 3ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ.13 | 3ம் மனுதாரரின் பான் அட்டை நகல் |
| ம.சா.ஆ.14 | 3ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல் |
| ம.சா.ஆ.15 | ம.சா.2ன் ஆதார் அட்டை நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :-</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-</u>** இல்லை

**<u>நீதிமன்ற தரப்பு சான்றாவணங்கள்:-</u>** இல்லை

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.07.09 17:20:14 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

**மற்ற விவரங்கள்**

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்த தேதி | 21.09.2024 |
| தீர்ப்பு நாள் | 09.07.2026 |
| மனுவில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.15,00,000/- |
| தீர்ப்பாயம் வழங்கியுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.9,50,100/- |
| மொத்த நீதிமன்ற கட்டணம் | ரூ.8,873.50/- |
| ஏற்கனவே செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | ரூ. 375/- |
| மீதி செலுத்தவேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ.8,498.50/- |

**செலவு பட்டியல்**

| **செலவு விவரங்கள்** | **தொகை** |
|---|---|
| விருது தொகைக்கான முத்திரை வரி | ரூ.8,873.50/- |
| வக்காலத்து நாமா | ரூ. 5.00 |
| சம்மன் பேட்டா தயாரித்தற்கான கட்டணம் | ரூ. 40.00 |
| வழக்கறிஞர் கட்டணம் | ரூ.16,501/- |
| மொத்தம் | ரூ.25,419.50/- |

S VADIVEL

Digitally signed by S VADIVEL
Date: 2026.07.09 17:20:18 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

Additional court fee paid, MPSR.No……..............; dated……………..

(SPL-I, SSJ